## தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் ஒழுங்கு முறைப்படுத்தல் திருத்தச் சட்ட முன்வடிவு!

# தனியார் பல்கலைகள் தொடங்க 45 ஏக்கர் நிலம் போதும் எனும் திருத்தத்திற்கு ஒப்புதல்!

### சட்டப் பேரவையில் – சட்ட முன்வடிவு மீதான விவாதத்திற்கு அமைச்சர் கோவி.செழியன் பதிலுரை!

**சென்னை, அக்.19-**
**சட்டப் பேரவையில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் நேற்று முன்தினம் தனியார் கல்லூரிகள் திருத்தச் சட்ட முன்வடிவு மீதான விவாதத்தில் ஆற்றிய உரை வருமாறு:-**

தமிழால் வாழ்ந்த தன்னிகரில்லாத தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, மாநில சுயாட்சியின் நாயகனாக விளங்குகிற தமிழ்நாடு முதலமைச்சர், உயர்கல்வித் துறையை உயர்த்திச் செல்கிற இந்தத் தருணத்தில் தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத் திருத்தம் குறித்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியிருக்கிற உறுப்பினர்கள் அண்ணன் கே.பி. அன்பழகன், கு.செல்வபெருந்தகை, அண்ணன் ம.சிந்தனை செல்வன், அண்ணன் வி.பி. நாகைமாலி, அண்ணன் ட்டி. இராமச்சந்திரன், அண்ணன் ஈ.ஆர். ஈஸ்வரன், அண்ணன் தி.வேல்முருகன், அண்ணன் முனைவர் த. இனிகோ இருதயராஜ், அண்ணன் வி.ஜி.இராஜேந்திரன் ஆகியோர் பல்வேறு கருத்துகளை உயர்கல்வித் துறையினுடைய வளர்ச்சிக்கு எடுத்துரையாற்றியிருக்கிறார்கள். அதில் உறுப்பினர் கே.பி.அன்பழகன் அவர்கள் உரையாற்றும் போது கலைஞர் கொண்டுவந்த அந்த நிலையை நீங்கள் தொடர வேண்டு மென்று இந்தச் சட்டத் திருத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற நிலையில் தன் கருத்தைப் பதிவு செய்தார். ஆனால் 2019-ல் தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகச் சட்டத்தைக் கொண்டு வந்ததே அவருடைய அரசு, அவரது ஆட்சி என்பதை முதலில் இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அதோடு தற்போதுள்ள கல்வி நிறுவனங்கள் அல்லாது புதியதாக ஒரு தனியார் பல்கலைக்கழகம் நிறுவ வழிவகை செய்யப்பட வேண்டும் என்பது தான் இந்தத் திருத்தத்தினுடைய முக்கிய நோக்கம்; Greenfield University அதாவது புதியதாக ஓர் இடத்தில் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென்று வரையறுக்கப்பட்டுள்ளது. புதிய பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென்றால், ஒட்டுமொத்தமாக இதுவரை ஊராட்சிப் பகுதி, நகராட்சிப் பகுதி, மாநகராட்சிப் பகுதி என்று வேறுபாடு இல்லாமல் 100 ஏக்கர் பரப்பளவு ஒரே இடத்தில் இருக்க வேண்டுமென்று வரையறை இருந்தது. அதில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி என்று வகை காணப்பட்டு, அந்தந்தப் பகுதிகளில் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதுதான் உயர்கல்வித் துறையை நாம் உயர்ந்த இடத்தில் எடுத்துச் செல்வதற்கான அடையாளங்கள். அதோடு, அண்டை மாநிலங்களில் உள்ள தனியார் பல்கலைக்கழகங்கள் தொடங்க பல்வேறு நிலைப்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. அது கல்வியாளர்களால் கண்காணிக்கப்பட்டுள்ளது.

#### உயர்கல்வி வளர்ச்சிக்கு பல்வேறு வழிமுறைகள்!

உதாரணத்திற்கு, அசாம் மாநிலத்தில் நகராட்சிப் பகுதியில் 20 ஏக்கர், மற்ற பகுதியில் 10 ஏக்கர் என்றும், கர்நாடக பகுதியில் மாநகராட்சிப் பகுதிகளில் 25 ஏக்கர், நகராட்சிப் பகுதிகளில் 35 ஏக்கர், உத்தரப்பிரதேசத்தில் நகராட்சிப் பகுதியில் 25 ஏக்கர், கிராமப்புற பகுதியில் 50 ஏக்கர் என்று அண்டை



மாநிலத்தில் உயர்கல்வியினுடைய வளர்ச்சிக்கு தனியார் பல்கலைக்கழகங்கள் துவங்குவதற்கு பல்வேறு வழிமுறைகள் காணப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் எடுத்துச்சொன்னதைப்போல, அண்டை மாநிலத்தினுடைய உயர்கல்வியின் வளர்ச்சியில் நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்கள் பங்கெடுக்காமல் தாய் மண்ணிலேயே உயர்கல்வி காண வேண்டுமென்று விரும்புகிற முதலமைச்சர் நம்முடைய தன்னிகரில்லாத முதலமைச்சர் அவர்கள்; அதனால் தான் மாணவர் நலன் காக்க பல்வேறு அறிவிப்புகளை தொடர்ந்து செய்த வண்ணம் இருக்கிறார்கள். அதோடு தனியாரை ஊக்கப்படுத்துவதற்கா என்ற எண்ணத்தை இங்கு உருவாக்கினார்கள்.

மாநில நலன் காத்திடவும், நமது மாணவர்களுடைய உயர் கல்வியில் பாதிக்கப்படாமல், அதிலும் ஆராய்ச்சிக் கல்வியாக உயர்த்தப்பட வேண்டும் என்பதற்காகத் தான் இதுபோன்ற திருத்தங்களை நாம் மேற்கொண்டு வருகிறோம். அதோடு இடஒதுக்கீட்டிற்கு ஆபத்து என்ற நிலையை, மரியாதைக்குரிய அண்ணன் அன்பழகன் அவர்கள் இங்கே கருத்து தெரிவித்தார்கள்.

#### பிதாமகன் ஆளுகிற மாநிலம்!

இடஒதுக்கீடு கொள்கையில் பிதாமகன் ஆளுகிற மாநிலம், இந்தியாவில் உண்டு என்றால் அது முதலிடம் நம்முடைய தமிழ்நாடு தான். எனவே, தனியார் பல்கலைக்கழகங்களில் 35 சதவிகித இடங்களை, தமிழ்நாடு மாணவர்களுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு இடஒதுக்கீடு முறை பின்பற்றப்படும் என்ற வார்த்தைகள் அதில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் எந்த மாற்றமும் இல்லை. மருத்துவம் சார்ந்த படிப்புகளில் சிறுபான்மையினர் அல்லாத நிறுவனங்கள் 65 சதவிகிதம் உள்ளது. தற்போது சிறுபான்மையினர் கல்லூரிகள் 50 சதவிகித இடங்களை அரசுக்கு ஒப்படைக்க வேண்டுமென்று சட்டத்திருத்த மசோதாவில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவைகளெல்லாம் உயர்கல்வியில் உயர்ந்த நிலைக்கு நாம் எடுத்துச்செல்வதற்கான சாத்தியக்கூறுகள்தான். அரசு உதவிபெறும் கல்லூரிகள் பாதிக்கப்படுமா? மாணவர்கள் நலன் பாதிக்கப்படாத என்ற நிலையில் உறுப்பினர் இங்கே எடுத்துச்சொன்னார். எந்த நிலையிலும் தனியாருக்கு தாரை வார்க்க வேண்டுமென்ற எண்ணம் உயர் கல்வியில் இல்லாத நிலையில் அனைத்து நிலையில் இருக்கிற ஏழையெளிய மக்கள் உயர்ந்த நிலைக்கு செல்லவேண்டுமென்பதற்கு, அரசு உதவிபெறும் கல்லூரிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படும், பல்கலைக்கழகங்களாக மாறும்போது அரசு உதவி பெறும் என்ற நிலை மாற்றப்படும். எனவே, இந்த வரையறையெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ள மசோதா உறுப்பினர் இங்கே இடத்தினுடைய விலையை சொல்லி, 100 ஏக்கர் நிலம் கிடைக்காது, எனவே, அந்த நிலப்பரப்பின் அளவை குறைத்திடவேண்டும் என்ற கருத்தை மரியாதைக்குரிய அண்ணன் ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்களும், மரியாதைக்குரிய நம்முடைய கு.செல்வபெருந்தகை அவர்களும், அருமை அண்ணன் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்களும், இராஜேந்திரன் அவர்களும் குறிப்பிட்டு சொன்னார்கள். அந்தவகையில் ஊரகப் பகுதியில் இருக்கவேண்டிய 50 ஏக்கர் நிலப்பரப்பை 45 ஏக்கர் நிலமாக, அந்த நிலப்பரப்பையும் குறைத்து, உயர்கல்விக்கு உயர்ந்து செல்வதற்கான, வழிவகைகளுக்கு ஆதரவு தெரிவித்த உறுப்பினர்கள் அனைவருக்கும், இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்து, உறுப்பினர் இறுதியாக சொன்னதைபோல் தந்தை வழியை பின்பற்றி, நீங்கள் இந்த மசோதாவில் கவனம் காட்டுகிறீர்கள் என்று சொன்னார்.

#### தந்தை வழியைப் பின்பற்றும் வீரத் திருமகனாக முதல்வர்!

இந்த அவைக்கு சொல்கிறேன், தந்தை வழியை பின்பற்றி, தமிழ்நாட்டில் மாநில சுயாட்சியை கட்டிகாக்கின்ற தீர்மானத்தை இன்றைக்கும் கொண்டு வந்த, ஒரு வீர திருமகன், முதலமைச்சர், முதலமைச்சராக இருக்கும் வரை உயர்கல்வி உயர்ந்த நிலையில் இருக்கும் என்பதை எடுத்துச்சொல்லி, மசோதாவை ஏகமனதாக நிறைவேற்றி தருமாறு பணிந்து கேட்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பதிலுரை வழங்கினார்.

---

## வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம்

# ஒன்றிய இலக்கிய அணி துணை அமைப்பாளர் பெ.முருகேசன் இல்லத் திருமணம்!

### அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நடைபெறுகிறது!

*வேலூர், அக்.19-*
அமைச்சர், கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் தலைமையில், வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, அமைப்பு சாரா மாநில கழக ஆட்டோ ஓட்டுனர்கள் சங்க தலைவர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. ஆகிய இவர்கள் முன்னிலையில், கே.வி.குப்பம் வட்டம், காமராசபுரம் பெ. முருகேசன் திருமதி விமலா இவர்களின் இளைய மகள். மு.காவியா பி.எஸ்.சி, நர்சிங் என்கிற மணமகளுக்கும், மேற்படி இதே கிராமம் காமராசபுரத்தைச் சேர்ந்த முன்னாள் இராணுவ வீரர் அ.வெங்கடேசன் - திருமதி சுமதி ஆகியோர் அன்பு மகன் வெ.ராஜேஷ் குமார் பி.ஈ. எம்.பி.ஏ. என்கிற மணமகனுக்கும், செதுவாலை ஸ்ரீ அன்னம்மாள் அண்ணாமலை திருமண மண்டபத்தில் மண விழா 24.10.2025 வெள்ளி காலை 6.30 மணியளவில் நடைபெறும்,

இம்மணவிழாவில் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

பெ.கோவிந்தசாமி, எம். சசிக்குமார் ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

---

## ஆணவப் படுகொலைத் தடுக்க ஆணையம்: முதல்வர் அறிவிப்பு!

# உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என்பதை விட்டொழித்து மனிதகுலம் வாழ வழி காண்போம்!

### ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

***சென்னை, அக்.19-***
**ஆணவப் படுகொலைகளைத் தடுக்க ஆணையம் அமைக்க முதல்வர் அறிவித்துள்ளார். உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என்பதை விடடொழித்து மனிதகுலம் வாழ வழி காண்போம் என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.**

**இதுகுறித்து 18.10.2025 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-**



தினகரன்

அக்டோபர் 18, 2025 சனிக்கிழமை

அடியோடு ஒழிப்போம்

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், சட்டமன்றத்தில் நேற்று ஒரு அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார். ஆணவ படுகொலைகளை தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து, அரசுக்கு உரிய பரிந்துரைகளை வழங்குவதற்காக, ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில் ஆணையம் அமைக்கப்படும் என அறிவித்துள்ளார்.

இந்த ஆணையத்தில், சட்ட வல்லுநர்கள், முற்போக்கு சிந்தனையாளர்கள் மற்றும் மாற்றுவியல் அறிஞர்கள் இடம் பெறுவார்கள். இந்த ஆணையம் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் கருத்துகளை பெற்று, ஆணவ படுகொலைகளை தடுக்க தேவையான, உறுதியான பரிந்துரைகளை தமிழக அரசுக்கு வழங்கும். ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், இந்த சமூகக் கொடுமையை தடுப்பதற்கென தமிழக அரசு உறுதியான புதிய சட்டங்களை இயற்றும் என்றும் முதலமைச்சர் தெளிவுபட பேசியுள்ளார்.

ஆணவ படுகொலையின் அடிப்படை நோக்கம், “கவுரவத்தை” நிலைநிறுத்துவது அல்லது குடும்பத்தின் “பெயருக்கு களங்கம்” ஏற்படாமல்

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், சட்டமன்றத்தில் நேற்று ஒரு அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார். ஆணவ படுகொலைகளை தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து, அரசுக்கு உரிய பரிந்துரைகளை வழங்குவதற்காக, ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி கே.என். பாஷா தலைமையில் ஆணையம் அமைக்கப்படும் என அறிவித்துள்ளார். இந்த ஆணையத்தில், சட்ட வல்லுநர்கள், முற்போக்கு சிந்தனையாளர்கள் மற்றும் மாற்றுவியல் அறிஞர்கள் இடம் பெறுவார்கள்.

இந்த ஆணையம் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் கருத்துகளை பெற்று, ஆணவ படுகொலைகளை தடுக்க தேவையான, உறுதியான பரிந்துரைகளை தமிழக அரசுக்கு வழங்கும். ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், இந்த சமூகக் கொடுமையை தடுப்பதற்கென தமிழக அரசு உறுதியான புதிய சட்டங்களை இயற்றும் என்றும் முதலமைச்சர் தெளிவுபட பேசியுள்ளார்.

ஆணவ படுகொலையின் அடிப்படை நோக்கம், “கவுரவத்தை” நிலைநிறுத்துவது அல்லது குடும்பத்தின் “பெயருக்கு களங்கம்” ஏற்படாமல் தடுப்பது ஆகும். சாதி அல்லது சமூக பின்னணியில் வேறுபாடுகள் உள்ள ஒருவரை காதலித்து திருமணம் செய்வது ஆணவ படுகொலைக்கு ஒரு முக்கிய காரணமாக அமைகிறது. தங்கள் சாதிக்கு வெளியே ஒருவரை திருமணம் செய்யும்போது, அது குடும்பத்துக்கு அவமானம் என்று கருதப்பட்டு, கொலைக்கு வழி வகுக்கிறது.

விவாகரத்து செய்து கொள்வதோ அல்லது திருமண உறவுக்கு புறம்பாக செயல்படுவதோ குடும்பத்தின் கவுரவத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என எண்ணி கொலை செய்யப்படுகிறார்கள். குடும்பத்தின் கட்டுப்பாடுகளையோ அல்லது பாரம்பரியகட்டுப்பாடுகளையோ மீறி நடப்பதாகவும், அதனால் கொலை செய்யப்படுவதாகவும் கருதப்படுகிறது. பொதுவாக பெண்களே இத்தகைய கொலைகளுக்கு இலக்காகின்றனர்.

வளர்ந்துவிட்ட சமுதாயத்தில் இப்படி ஒரு கொலை நடப்பது மனிதகுலத்துக்கு பெரும் தலைகுனிவை ஏற்படுத்துகிறது. எல்லா துறையிலும் முன்னேறி வருகிறோம் என மார் தட்டுகிற நாம், கவுரவம் என்ற ஒற்றை சொல்லுக்காக இன்னொரு மனித உயிரை பறிப்பது எந்த வகையிலும் நியாயம் இல்லை. இது, எவ்வளவு கீழ்த்தரமான செயல் என்பதை எண்ணி பார்ப்பதும் இல்லை. இந்த அவலத்தை சமுதாயத்தில் இருந்து அடியோடு நீக்க வேண்டும். வேரும், வேரடி மண்ணோடும் துடைத் தெறிய வேண்டும் என்ற உயரிய சிந்தனையோடு முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்த ஆணையத்தை அமைத்துள்ளார். இந்த ஆணையம் பரிந்துரைக்கும் அம்சங்கள் அனைத்தும் சட்ட முன்வடிவமாக மாறும். அதன்பிறகு, சட்டத்தின் பிடி இறுகும். ஆணவ படுகொலைகள் அடியோடு தடுக்கப்படும் என்பதே நிதர்சனம். சட்டம் கடுமையாக்கப்பட்டால் தான் குற்றங்கள் குறையும் என்பதை மேற்கத்திய நாடுகள் சில இன்னமும் தங்களது முக்கிய கொள்கையாக பின்பற்றுகின்றன. அந்த நிலையை நாமும் உருவாக்கித்தான் ஆக வேண்டும். இதை செய்தால்தான் ஆணவ படுகொலைகளை தடுக்கமுடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. அதற்காகத்தான் இந்த ஆணையம்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியபடி, உலகம் அறிவு மயமாகிறது, ஆனால் அன்பு மயமாவது தடுக்கப்படுகிறது. எல்லோரிடத்திலும் அன்பு காட்டுவோம், இழிச்சொல் தவிர்ப்போம். வீண் வறட்டு கவுரவம் தடுப்போம். நம் உயிரைப்போல், எல்லா உயிர்களையும் நேசிப்போம். உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்பதை விட்டொழித்து, மனிதகுலம் வாழ வழி காண்போம். ஆணவ படுகொலையை அடியோடு ஒழிப்போம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# பேரறிஞர் அண்ணாவின் நூல்களை - பிற மொழிகளில் மொழி பெயர்த்திடுவீர்!

### சட்டப் பேரவையில் – ஆயிரம் விளக்கு நா.எழிலன் வலியுறுத்தல்!

***சென்னை, அக்.19-***
***சட்டப் பேரவையில், கேள்வி நேரத்தின்போது, ஆயிரம் விளக்கு தொகுதி கழக உறுப்பினர் டாக்டர் எழிலன் நாகநாதன், “பேரறிஞர் அண்ணா அவர்களின் நூல்களை பிறமொழிகளில் மொழி பெயர்க்க அரசு ஆவன செய்ய வேண்டும்!” எனக் கோரிக்கை விடுத்தார்.***

சட்டப் பேரவையில் இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**டாக்டர் நா.எழிலன்:** பேரறிஞர் அண்ணா அவர்களின் நூல்களை பிற மொழிகளில் மொழிபெயர்க்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் மு.பெ. சாமிநாதன்:** பேரறிஞர் அண்ணா அவர்களின் நூல்களைப் பிற மொழிகளில் மொழி பெயர்க்க, முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். துறையின் சார்பில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**டாக்டர் நா.எழிலன்:** ‘கருத்து மோதல் நமக்குள் ஏற்படலாம்; வளர்ச்சிக்கு அறிகுறி அது. நம் மக்கள் வனவிலங்குகள் அல்ல. இது நாடு; காடு அல்ல. நாட்டுக்கு முறை தேவை; காட்டிற்கு ஆட்சியல்ல. காட்டு முறையை கையாண்டால் அதற்கு பெயர் ஜனநாயகம் ஆகாது; அதற்கு பெயர் பாசிசம்’ என்று சொன்னவர் பேரறிஞர் அண்ணா.

தந்தை பெரியாருடைய எழுத்துகளை பிற மொழிகளில் நாம் மொழிப்பெயர்க்க திராவிட மாடல் முதல்வர் அவர்கள் வழிவகுத்தார். அதனால், இன்று பெரியாருடைய பிறந்தநாளை மிகவும் ஜனரஞ்சகமாக, மக்களின் குரலாக, Jawaharlal Nehru University-ல் கொண்டாடப்பட்ட தொகுப்புகளை நாம் கண்டறிந்தோம். பேரறிஞர் அண்ணாவின் சமூக, அரசியல் கொள்கைதான் திராவிட முன்னேற்றக் கழகம். அடிப்படை கொள்கையான பகுத்தறிவு, மாநில உரிமை, சமூக நீதி, மதச்சார்



பின்மைதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. இன்றைக்கு தமிழ்நாட்டின் அரசியல் கொள்கையாக மாறிய சூழ்நிலை பேரறிஞர் அண்ணாவின் உழைப்பு. எனவே, நாடெங்கும் மாநில உரிமைகள் தளர்த்திட, வளர்ந்திட, இனக் குழுக்கள் தங்கள் மொழியை பாதுகாத்திட பல்வேறு மாநிலங்களில் சமூக அமைப்புகள் எடுத்துக் காட்டாக அமைய பேரறிஞர் அண்ணாவின் எழுத்துகள் பிற மொழிகளில் மொழி பெயர்க்க வேண்டுமென்கிற கேள்வியை தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் மு.பெ. சாமிநாதன்:** ஏற்கெனவே உறுப்பினர் அவர்களுடைய வினாவிற்கான விடையைத் தந்திருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் அதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அதேபோல, தந்தை பெரியாருடைய கருத்துகளையெல்லாம் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதையும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேபோல, சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நூல்களையெல்லாம் கூட தமிழில் மொழிபெயர்க்கக்கூடிய நடவடிக்கைக்கும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, அதற்கும் துறையின் சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், உறுப்பினர் அவர்களின் கருத்துகள் எதுவாக இருந்தாலும் நிச்சயமாக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்து சென்று, துறையின் சார்பிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் நா. எழிலன்:** Tony Blair Institute for Global Change என்ற ஒரு அமைப்பு ஆப்பிரிக்கா துணைக் கண்டத்தில் இனக்குழுக்காகப் பிரிந்த கீழ்நிலையிலுள்ள நாடுகளுக்கு எந்தவகையான அரசாட்சி முறை ஏதுவாக இருக்குமென்ற ஆய்வின் அடிப்படையில் பார்க்கும் போது, அவர்கள் பரிந்துரை செய்வது திராவிட மாடல் ஆட்சி முறைதான் (மேசையைத் தட்டும் ஒலி) சமூக பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களை உயர்த்தளிக்கும் என்ற ஆய்வினை வெளிப்பாடு கொண்டு வந்தார்கள். அதன் தொடர்ச்சியாக, நாம் பல்வேறு தலைவர்களுக்கு பல்வேறு மரியாதைகள் செலுத்துகிறோம். அதேபோல், திராவிட மாடல் என்று சொல்லும்போது நம் தமிழ்நாடு வளர்ச்சிக்கான பல்வேறு சாதனைகள், அது காலை உணவுத் திட்டமாக இருக்கட்டும்; மதிய உணவுத் திட்டமாக இருக்கட்டும்; சத்துணவுத் திட்டமாக இருக்கட்டும்; நிலச்சீர்த்திருத்தமாக இருக்கட்டும்; சமூக பொளாதார வளர்ச்சியாகட்டும்; சாதனைகளைக் காட்சிப்படுத்தி, தமிழ்நாட்டு மக்களுக்கு இந்த சாதனைகளை உணர வைக்குமாறு அருங்காட்சியம் அமைக்கப்படுமா?

**அமைச்சர் மு.பெ.சாமிநாதன்:** நம்முடைய திராவிட மாடல் ஆட்சியினுடைய நாயகன் முதலமைச்சர் அவர்கள், திட்டங்கள் மக்களுக்கு பல்வேறு விதங்களில் எடுத்து சொல்லப்பட்டு வருகிறது. பத்திரிகை மூலமாக, ஒளி நாடாக்கள் மூலமாக, அரசு நிகழ்ச்சிகள் மூலமாக இன்றைக்கு எடுத்து சொல்லப்பட்டு வந்தாலும், உறுப்பினர் அவர்களின் கருத்தை பரிசீலிக்கும் வகையில் திட்டங்களைப் பற்றிய அருங்காட்சியகம் அமைப்பதற்கான நடவடிக்கை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, துறையின் சார்பில் பரிசீலிக்கப்படும்.

**ஜெ.முகம்மது ஷாநவாஸ்:** தனித்தமிழ் இயக்கம் கண்ட மறைமலை அடிகள் நினைவாக நாகப்பட்டினத்தில் ஒரு நினைவரங்கம் கட்ட வேண்டும் என்கிற கோரிக்கை நீண்ட காலமாக இருக்கிறது. அந்தக் கோரிக்கை ஏற்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மறைமலை அடிகளுக்கு வழிகாட்டியாக விளங்கிய குலாம் காதிறு நாவலர் அவர்களுடைய பெயரை நாகூர் நூலகத்திற்கு சூட்ட வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அந்தப் பெயர் சூட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதுபோல, சமூக நல்லிணக்கம் வளர்த்த சந்தன தமிழர் சிராஜூல் மில்லத் அப்துல் சமது அவர்களுடைய நூற்றாண்டு விழா அரசு விழாவாக கொண்டாடப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் மு.பெ.சாமிநாதன்:** முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, இன்றைக்கு பல்வேறு தலைவர்களுக்கும், சுதந்திரப் போராட்ட தியாகிகள், தமிழ்மொழி தியாகிகளுக்கெல்லாம் சிலைகள், அரங்கங்கள், மணிமண்டபம் என்று எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. உறுப்பினருடைய கருத்துகள் நிச்சயமாக சட்டமன்ற தேர்தலுக்குப்பிறகு ‘திராவிட மாடல்’ ஆட்சி மீண்டும் உருவாகப் போகிறது. அதிலே நிச்சயமாக செயல்படுத்தப்படுவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

---



தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு நிறுவனங்களின் தயாரிப்புகளை விரைவு வணிகம் (Quick Commerce) மூலம் பொதுமக்களின் இல்லங்களுக்கே நேரடியாக கொண்டு சேர்க்கும் விற்பனையினை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்து, BLINKIT விரைவு வணிக தளத்தில் முதல் ஆர்டர் செய்து கூட்டுறவு நிறுவனங்களின் தயாரிப்புகளை பெற்றுக்கொண்டார். உடன், அரசு அதிகாரிகள் உள்ளனர்.